சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 54/2022**

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 07ம் நாள் செவ்வாய்க்கிழமை மனுதாரர்/வாதிதரப்பு சாட்சியமாகிய **ரமேஷ்குமார் PW1** வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின்படி /ஏற்பாட்டின்படி **திருமதி.S.இந்திராகாந்தி, எம்.எல்.**, சார்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ரமேஷ்குமார்** | வயது | |
| தகப்பனார் பெயர் | | கிராமம் | |
| கணவர் பெயர் | | தாலுக்கா | |
| தொழில் | | | |

07.07.2026

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன். 10.06.2019 தேதியிட்ட பிராமசரி நோட் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 20.10.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 19.11.2021 தேதியிட்ட பிரதிவாதி வாதியின் தகப்பனாருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.3** ஆகும். எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

(பிரதிவாதிதரப்பு தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)